# நாடகத்தில் சமகால சமூக அசையியக்கத்தின் தாக்கமும் மௌகுருவின் இராவணேசன் - 2010 மீதான ஓர் பார்வையும்

சந்திரகுமார் சு

சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் நாடகம் காத்திரமான பங்கினை வகிக்கின்றது என்பது இதன் மூலம் புலனாகின்றது. ஈழத்து தமிழ் நாடகத்திலும் இவ்வாறான தன்மையைக் காணலாம். கூத்து சமகாலப் பிரச்சினையை கூறுவதில்லையாயின், 1960களுக்கு பின்னர் இத் தன்மை ஏற்படுகின்றது. ஏனெனில் கூத்து இக்காலத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மீளுருவாக்கம் செய்யப்பட்டது, இதன் வெளிப்பாடாக கர்ணன்போர், நொண்டிநாடகம், இராவணேசன், வாலிவதை போன்றன உருவெடுத்து வெளிக்கிளம்பின. இதனால் கூத்துத்தான் தமிழர்களின் தேசிய கலை வடிவம் எனும் நிலைமை இன்று அனைத்து மக்களிடமும் உணரப்பட்டுள்ளது.

1970களில் பின்னர் ஈழத்துக் கூத்தில் சமகால சமூகப் பிரச்சினை உள்வாங்கப்பட்டு இரணடு நாடகங்கள் படைக்கப்பட்டன. அவற்றுள் சி.மௌனகுருவால் தயாரிக்கப்பட்ட சங்காரமும் அம்பலத்தாடிகளால் தயாரிக்கப்பட்ட கந்தன்கருனையும் குறிப்பிடத்தக்கன. சங்காரம் மனித சமூகத்தில் பிடித்த பேதங்களிலிருந்தும் அடக்குமுறைகளிலிருந்கும் விடுபடுவதையும், கந்தன் கருணை சாதித் தளைகளிலிருந்து மனுக்குலம் விடுபடும் பிரச்சினையையும் வெளிக் கொணர்கின்றது.

ஆனால் அத்தோடு நின்றுவிடாது பழமையான கூத்தின் அழகியலோடு பழைய கதையை இக்கால சமுகமாற்றம், சமகாலப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு கூறும் முயற்சி தற்போது இடம்பொற்றுள்ளது. இவ்வாறான முன்னெடுப்புக்களின் வெளிப்பாடே 2010தில் சி.மௌனகுருவால் தயாரிக்கப்பட்ட இராவணேசன் நாடகமாகும். அது ஈழத்துத் தமிழர்களின் சமூக அரசியல் போக்குகளை உள்வாங்கி எழுத்துருவாக்கப்பட்டு கூத்து அழகியலுடன் நெறிப்படுத்தப்பட்டது.

இவ் இராவணேசனில் யுத்தத்தால் அனைத்துத் தாய்மாரின் பிள்ளைகளும் அழிகின்றனர். யுத்தம் வேண்டாம், யுத்தத்திற்குத் தயாராகும் போது பெண்களின் ஆலோசனைகளுக்கும், புத்திமதிகளுக்கும் செவிமடுத்து அவர்களுக்குச் சமநிலை வழங்கப்படல் வேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்படுகின்றன. யுத்தத்தின் பாதிப்பால் கணவனை இழந்த பெண்களின் மனக்குமுறல்கள் போன்ற பல விடயங்களை உள்வாங்கி இன்றய சமூகப் பின்புலத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இவ்வாறான உள்ளடக்கத்தையும், புதிய அழகியல் நுட்பங்களையும் கொண்டு காத்திரமாகப் படைக்கப்பட்ட **"இராவணேசனை"** மையமாகக் கொண்டதாகவே இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** சமூக அசையியக்கம், இராவணேசன், நாடகம்

*நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக் கழகம். srckumar20@yahoo.com*